NW EDK
EDK-Ost
BKZ
Nordwestschweizerische Erziehungsdirektorenkonferenz
Erziehungsdirektoren-Konferenz der Ostschweizer Kantone und des Fürstentums Liechtenstein
Bildungsdirektoren-Konferenz Zentralschweiz

# பாடசாலைகளிலும் குடும்ப மற்றும் பாடசாலைகளுக்கு மேலதிகமான பராமரிப்பு நிலையங்களிலும் பிள்ளைகளுக்கு நோய் மற்றும் சளிபிடித்தல் (தடிமல்) அறிகுறிகள் ஏற்படும் பொழுது மேற்கொள்ள வேண்டிய நடைமுறை

மார்ச் 2021 இல் சுகாதாரத் துறை மத்திய கூட்டாட்சி அலுவலகம் (BAG) «குழந்தை மருத்துவத்துறை சுவிட்சர்லாந்து» உடன் இணைந்து குழந்தைகள் மற்றும் இளவயதினர்க்கான பரிசோதனை அளவுகோல்களை புதிதாக திருத்தி அமைத்தது. இது டி.கே.வி (DVK) உருவாக்கிய நடைமுறை விளக்கப்படத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் பாடசாலைகளிலும் குடும்ப மற்றும் பாடசாலைகளுக்கு மேலதிகமான பராமரிப்பு நிலையங்களிலும் குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கு சளிபிடித்தல் அறிகுறிகள் ஏற்படும்பொழுதான நடைமுறை பற்றி விபரிக்கின்றது. வரவிருக்கும் குளிர்காலம் மற்றும் காய்ச்சல் பருவகாலத்தைக் கருத்தில் கொண்டு, சளிபிடித்தல் அறிகுறிகள் ஏற்படும் பொழுது பெற்றோர் மற்றும் பாடசாலைகள் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளவை உதவியாக இருக்கும். இத்துடன் இணைக்கப்பட்ட நடைமுறை விளக்கப்படமானது BAG இன் ஒத்துழைப்புடனும் சிறுவர்களில் வைரஸ் தொற்றிப்பரவுதல் பற்றிய தற்போதைய அறிவின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

## 6 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கான நடைமுறை

வயது வந்தவர்களுக்குச் செல்லுபடியாகும் அதே மருத்துவ அளவுகோல் தற்பொழுது சிறுவர்கள் மற்றும் இளம் வயதினருக்கும், செல்லுபடியாகும். கோவிட்-19 உடன் ஒத்துப் போகக்கூடியதான அறிகுறிகள் ஏற்படும் பட்சத்தில், பிள்ளை அல்லது இளையோர் வீட்டிலிருப்பதுடன் மருத்துவரிடத்தில் தன்னை பரிசோதனைக்கு உட்படுத்துகின்றது. பரிசோதனை முடிவு பொசிடிவ் ஆக இருக்கும் பட்சத்தில், தனிமைப்படுத்தல் சுட்டிக்காட்டப்படுகின்றது. பரிசோதனை முடிவு நெகட்டிவாக இருக்கும் பட்சத்தில், சிறுவர் அல்லது இளையோர் அறிகுறிகள் இன்றி 24 மணிநேரம் வீட்டிலேயே இருப்பர் (பின் பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ள நடைமுறை விளக்கப்படத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும்).

இந்த இலகுவான நடைமுறை காரணமாக, ஆரம்ப மற்றும் மேல்நிலைப் பாடசாலைகளுக்கு தனியான நடைமுறை விளக்கப்படம் அவசியமற்றதாகின்றது.

## 6 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கான நடைமுறை

6 வயதுக்குட்பட்ட அறிகுறிகளையுடைய குழந்தைகளுக்கான நடைமுறை மிகவும் வேறுபட்டது. இத்துடன் இணைக்கப்பட்ட வழிமுறை ஒரு உதவி வழங்குவதாகவும் வழிகாட்டியாகவும் செயல்படுகிறது. இங்கே முக்கியமானது யாதெனில்:

- பொது உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பதுடன் 38.5º க்கு மேல் புதிதாக காய்ச்சலுடனும் காய்ச்சலின்றியும் உள்ள பிள்ளைகள் வீட்டிலேயே இருங்கள். சிகிச்சையளிக்கும் மருத்துவரை பெற்றோர் தொடர்பு கொள்ளவும். மருத்துவர் வேறு நோய்நிர்ணயம் எதனையும் மேற்கொள்ளாத பட்சத்தில், பரிசோதனை ஒன்று செய்யப்பட வேண்டும். சோதனை முடிவு எதிர்மறையாக (நெகடிவாக) இருந்தால், 24 மணித்தியாலங்கள் காய்ச்சல் இல்லாதிருந்த பின்னர் (பிள்ளை) பாடசாலைக்கு மீண்டும் செல்ல முடியும்

- பொது உடல்நலம் நல்ல நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு 38.5º க்கு மேல் புதிதாக, கடுமையான இருமல் அல்லது காய்ச்சல் இருக்கும் பட்சத்தில், முதலில் வீட்டிலேயே இருங்கள். பிள்ளைக்கு மற்றைய கோவிட்-19 அறிகுறிகள் தென்படும் பட்சத்தில், மருத்துவரை அணுகி கலந்துரையாட வேண்டும் - வேறு எந்த நோய்நிர்ணயமும் இல்லாத பட்சத்தில் - பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- காய்ச்சல் அல்லது கடுமையான இருமல், மற்றும்படி நல்ல பொதுவான தேகாரோக்கிய நிலையுடன் மூன்று நாட்கள் அல்லது அதற்கு மேல் நீடித்திருப்பத்துடன் வேறு அறிகுறிகள் எதுவும் இல்லாதிருபினும் கூட, மருத்துவரை அணுகவும் - வேறு எந்த நோய்நிர்ணயமும் இல்லாத பட்சத்தில் - ஒரு பரிசோதனை நடத்தப்பட வேண்டும்.
- மூக்கு வடிதல் மற்றும் / அல்லது தொண்டை நோவுடன் இலேசான இருமலுடனும் / இருமல் இல்லாமலும், ஆனால் காய்ச்சல் இல்லாமல் நல்ல பொதுவான உடல்நிலையிலிருப்பின், பாடசாலை / பராமரிப்பு நிலையங்களிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டியதில்லை என்பதுடன் பரிசோதனையும் கூட மேற்கொள்ளப்பட வேண்டியதில்லை.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டி 6 வயதுக்குட்பட்ட அறிகுறிகள் உள்ள குழந்தைகளுக்கான நடைமுறையை விவரிக்கிறது. ஒரு பாடசாலையில் அல்லது பராமரிப்பு நிலையத்தில் வெளிப்படும் சோதனையின் ஒரு கட்டமைப்பாக, பிள்ளைகள் எந்த வயதினராக இருப்பினும் அவர்களுக்கு அறிகுகள் இல்லாத பொழுதிலும் கூட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

«குழந்தை மருத்துவத்துறை சுவிட்சர்லாந்து» என்ற அமைப்பு «www.coronabambini.ch» என்ற ஒரு ஒன்லைன் கருவியை நடைமுறைப்படுத்துகின்றது. இது நோய்வாய்ப்பட்ட பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் அறிகுறிகளை மதிப்பிடுவதற்கும், அவர்கள் பாடசாலைக்குச் செல்லலாமா செல்லகூடாதா என்பதைத் தீர்மானிப்பதற்கும் இது ஒரு கட்டமைக்கப்பட்ட கேள்வியின் மூலம் உதவுகின்றது. தொற்றுநோயியல் சூழ்நிலையைப் பொறுத்து இவ் ஒன்லைன் கருவி தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறது. இது ஒரு மேலதிக சலுகை என்பதுடன், பெற்றோர்களுக்கு இது குறித்து அறிவுறுத்தப்படுவதுடன் அவர்கள் அதனை மீண்டும் கைக்கொள்ளலாம்.

டொச்-சுவிஸ் தொடக்கப் பாடசாலைகள் மாநாடு [Deutschschweizer Volksschulämter-Konferenz (DVK) (DVK)], 15.10.2021